2022 மார்ச் 24] [திரு. கே.என். நேரு]

திட்டத்தின் வாயிலாக புதுக்கோட்டை நகராட்சி, வள்ளியூர், விராலிமலை உள்ளிட்ட 15 கிராமங்களுக்கும் தினமும் 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 1995 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்த திட்டம் என்ற காரணத்தால் PVC பைப்களில் ஆங்காங்கே கசிவுகள் ஏற்பட்டு, ஒவ்வொரு முறையும் அதைச் சீரமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

அதனால்தான் அன்னவாசல், குன்னாண்டார்கோவில், பொன்னமராவதி, திருமயம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,094 குடியிருப்புகளுக்கும் ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் காவேரியை நீராதாரமாகக் கொண்டு ஒரு புதிய திட்டத்திற்கு 30–6–2022–க்குள் Detailed Project Report தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். விராலிமலை மட்டுமல்ல; புதுக்கோட்டை நகரத்திலும் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. அதனால்தான் இந்தத் திட்டத்தை இப்போது தொடங்கியிருக்கிறோம். எவ்வளவு விரைவாக அதைச் சீர் செய்து தர முடியுமோ அவ்வளவு விரைவாகத் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல ஆலங்குளம் தொகுதி குறித்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றைய முன்தினமே கமிஷனர் அவர்களுக்குச் சொல்லப்பட்டு, விரைவாக இந்தப் பணியை முடித்து, இருக்கின்ற திட்டத்தில் குடிநீரை அதிகப்படுத்தித் தருவதற்கு உரிய பணியைச் செய்து தருமாறு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். விரைவில் அது சரிசெய்து தரப்படும்.

(ஆ) கன்னியாகுமரி–களியக்காவிளை மற்றும் காவல்கிணறு-நாகர்கோவில் சாலைப் பணிகளை விரைவுபடுத்துதல் மற்றும் இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் ஒரு வளமான மாவட்டம். அதிகமான ஜனப்பெருக்கம் உள்ள மாவட்டம். அந்த மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 4 வழிச் சாலை, கன்னியாகுமரி முதல் களியக்காவிளை, கேரளா பார்டர், காவல்கிணறு முதல்

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [*2022 மார்ச் 24*

*நாகர்கோவில் 47*A, *இங்கெல்லாம் பணிகள் நடைபெறவேயில்லை. இதற்காக மக்கள் தியாக உணர்வோடு, அர்ப்பணிப்போடு, நிலங்களை, விலை மதிப்பில்லாத சொத்துகளைக் கொடுத்தார்கள். ஆனால், அவர்களுக்கு இழப்பீடு சரியாக வழங்கப்படவில்லை. 200 கோடி ரூபாய் இன்னும் வழங்க வேண்டும். இந்த அரசு 4 வழிச்சாலைக்காக 2,000 கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்திருக்கின்றது. ஆனால், இப்பொழுது அந்தப் பணிகள் மெத்தனமாக நடைபெறுகின்றன. பணிகள் முடக்கப்படுவதாக ஐயம் ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகின்றபட்சத்தில் மக்களுக்கு மிகுந்த பாதிப்பு இருக்கும். போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நாகர்கோவில்—களியக்காவிளை சாலையைச் செப்பனிடக் கேட்டோம். ஓரளவு பராமரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அது போதாது. இன்னும் பராமரிக்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்து இந்தப் பணியை விரைந்து செய்து, விரைவில் போக்குவரத்து நெரிசலைத் தீர்ப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.*

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இரண்டு நெடுஞ்சாலைப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது. தேசிய நெடுஞ்சாலை 47—ல் கேரளா—தமிழ்நாடு எல்லை முதல் வில்லுக்குறி வரை 23.25 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணியை ரூ.519 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள திருவாளர்* L&T *நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, 12—8—2012 அன்று பணிகள் ஒப்படைக்கப்பட்டன. தற்போது அதில் 70 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக, தேசிய நெடுஞ்சாலை எண் 47*A*—ல் வில்லுக்குறி முதல் கன்னியாகுமரி வரை மற்றும் தேசிய நெடுஞ்சாலை எண் 47*B*—ல் நாகர்கோவில் முதல் காவல்கிணறு வரை 16.37 கி.மீ நீளமுள்ள 4 வழித்தடமாக, மொத்தம் 42.70 கி.மீ. நீளச் சாலைப் பணிகளுக்கு ரூ.559 கோடி மதிப்பீட்டில் திருவாளர்* L&T *நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, 8—7—2012 அன்று பணிகள் ஒப்படைக்கப்பட்டன. அதில்,*

2022 மார்ச் 24] [திரு. எ.வ. வேலு]

76 சதவிகித பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், quarry *மண் எடுக்கும் இடத்தில் மலைப் பகுதி பாதுகாப்பு மண்டலம் உள்ளதாகவும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டால் அடர்ந்த மரங்கள் உள்ள பகுதிகள் பாதிக்கப்படும் என்பதாலும், நில எடுப்புப் பணிகளில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாகவும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அந்தப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள இயலாத நிலையே இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. நில எடுப்புப் பணிகளில், கடந்த ஆட்சிக் காலத்தில் முதலில்* guideline value*–ஐ உயர்த்தினார்கள். அப்படி உயர்த்தியதால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அதிக பணம் கிடைத்தது. அதற்குப் பிறகு, இதே சட்டமன்றப் பேரவையில்* guideline value *அதிகமாக இருக்கிறது என்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதன் விளைவாக அப்போதிருந்த ஆட்சியாளர்கள்* guideline value*–ஐக் குறைத்தனர்.* Guideline value*–ஐக் குறைத்ததனால், விவசாயிகளுக்கு ஏற்கெனவே கொடுத்த பணத்திற்கு நிகராக கொடுக்க முடியாத சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்டது. அதனால், சில விவசாயிகள் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப் போகிறோம் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், தங்களுக்குரிய பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னதால், அப்போது பணிகளை முடிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த இரண்டு காரணங்களினாலும், கன்னியாகுமரி மாவட்டம் மலைப் பகுதியாக இருப்பதால், மலைப் பகுதி பாதுகாப்பின்கீழ் அங்கு* gravel *எடுக்கக் கூடாது என்ற அடிப்படையிலும் மாவட்ட ஆட்சித் தலைவரால் இதற்கான ஆணை பிறப்பிக்க முடியாத சூழ்நிலையில், பக்கத்தில் இருக்கின்ற திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கிராவல், ஜல்லி, மணல் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளலாம் என்று அரசின் சார்பில் அறிவுறுத்தப்பட்டது. அப்படியிருந்தும்,* L&T *நிறுவனம் ஏற்கெனவே போடப்பட்ட* estimate*–ன்படி அந்தச் சாலைப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டால் தங்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதால், 31 ஆம் தேதியுடன் இந்தப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை முடித்துக்கொள்கிறோம் என்றும், இன்றைய தேதியிலுள்ள* estimate cost*–ன்படி* re–tender *கோர வேண்டும் என்றும் தெரிவித்தனர். இந்தச் சாலையானது முழுக்க, முழுக்க மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள சாலையாக இருப்பதால், அந்த நிறுவனம் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்காரி அவர்களிடம் இதுபற்றி தெரிவித்துவிட்டது. ஆகவே, இந்தச் சாலைப் பணியை 31 ஆம் தேதியுடன் நிறுத்திவிட்டு,*

[திரு. எ.வ. வேலு] [*2022 மார்ச் 24*

மீண்டும் re–tender *விட வேண்டிய நிலைதான் ஏற்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக நானே நேரடியாக மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களைச் சந்தித்து, இந்தப் பணிக்காக* re–tender *விட வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்காரி அவர்களும், இதில் தனிக் கவனம் செலுத்தி, 70 சதவிகிதப் பணிகள் முடிந்திருப்பதாலும், இன்னும் 30 சதவிகிதப் பணிகள் மட்டுமே முடிக்க வேண்டியிருப்பதாலும், உடனே* re–tender *கோருவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து அவர்களிடம் மீண்டும் வலியுறுத்தி, இந்தச் சாலைப் பணியை முடிப்பதற்கு மாநில அரசின் சார்பில் முழு கவனத்தைச் செலுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு மேலும் ஒரு செய்தியை நான் இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நேற்று முன்தினம் மாண்புமிகு ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு. நிதின் கட்காரி அவர்கள் ராஜ்ய சபாவில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன (மேசையைத் தட்டும் ஒலி) என்றும், தமிழக அரசின் முயற்சியால் இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே, கடந்த 8 மாத காலத்தில் விபத்துகளின் எண்ணிக்கை 15 சதவிகிதம் குறைந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்றும், விபத்துகளைக் குறைப்பதிலே ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள் என்றும், இந்த விஷயத்தில் தமிழ்நாடு model*–ஐ நாங்கள் பின்பற்றத் திட்டமிட்டு வருகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் கூறியிருக்கிறார்கள்.*

விபத்துகளின் எண்ணிக்கை 15 சதவிகிதமாகக் குறைந்திருப்பதற்குக் காரணம், road safety. *சாலைப் பாதுகாப்பு என்பது 5 துறைகள் சம்பந்தப்பட்டது. அந்த 5 துறைகளிலும் அதிகமாக ஈடுபடுகின்ற துறை நெடுஞ்சாலைத் துறைதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையினரையெல்லாம் அழைத்து, ஒரு முறைக்கு இரு முறை ஆய்வுக் கூட்டம் நடத்தி, அறிவுரை வழங்கி,* road safety*–யில் தன்னுடைய எதிர்பார்ப்புகளைத் தெரிவித்து, எவ்வாறு இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதன் அடிப்படையில், இந்தத் துறையில் இன்றைக்கு பல்வேறு பணிகளை நாங்கள் செய்து*

2022 மார்ச் 24] [திரு. எ.வ. வேலு]

கொண்டிருக்கிறோம். அப்படி ஓர் ஆய்வுக் கூட்டத்தில் நாங்களும் பல்வேறு கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொன்னோம். அதாவது, ஒரு விபத்து ஏற்படுகின்றபோது ஒருவர் இறந்து விடுகிறார் அல்லது இறக்கின்ற நிலையில் உள்ளார் அல்லது விபத்தில் கை உடைகிறது அல்லது கால் உடைகிறது அல்லது மண்டை உடைந்து இரத்தம் வழிந்துகொண்டே இருக்கிறது என்றால் இப்படிப்பட்ட நிலையிலே அவர் வெளிநாட்டுக்காரராக இருக்கலாம்; வெளி மாவட்டத்துக்காரராக இருக்கலாம்; வெளி மாநிலத்துக்காரராக இருக்கலாம்; ஆனால், அப்படிப்பட்டவர்களுக்கு தமிழ்நாட்டிலே விபத்து ஏற்படுகிறபோது ஏதாவது உதவ வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டதனுடைய விளைவாக மறுநாளே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஈர நெஞ்சத்தின் வெளிப்பாடாகத்தான் இன்றைக்கு 'நம்மைக் காக்கும் 48' என்கிற திட்டம் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்பான திட்டங்கள், ஆலோசனைகளை எல்லாம் எங்கள் துறைக்கு வழங்கிக் கொண்டிருக்கிற அடிப்படையில்தான், இன்றைக்கு மத்திய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. நிதின் கட்காரி அவர்கள் பாராட்டுகின்ற அளவுக்கு இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுகின்றது என்பதை நான் மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—10

3. நகைக் கடன் தள்ளுபடி—விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகைக் கடன் தள்ளுபடியில் நேற்று ஒருநாள் மட்டும் 1,000 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட இதுவரை 5 இலட்சத்து 48,000 கடன்களுக்கு தள்ளுபடி இரசீதும், நகைகளும் இந்த 3 நாட்களுக்குள்ளாக வழங்கப்பட்டிருக்கின்றன. நான் 31 ஆம் தேதி அன்று முடியுமென்று சொன்னேன். தற்போது கண்டிப்பாக 31 ஆம் தேதிக்கு முன்பாகவே 28 ஆம் தேதியே முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*